O.S. No: 131/2021
பெயர்:சண்முகம்
**வா.சா. 4**
09-09-2025
**குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி, பிரதிவாதியை தெரியும். இரண்டு பேரும் உடன்பிறந்த சகோதரர்கள். அவர்களுக்குள் உள்ள தனிப்பட்ட விசயங்கள் பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி எனக்கு தெரியாது . இவர்களுக்குள் 12 லட்சம் தான் பிரச்சினை என்று எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள் அண்ணன் தம்பிக்குள் பேசிக்கொண்டு என்னிடம் வந்தார்கள் . அவர்கள் இருவரும் சொன்னதன் பேரில் தான் எனக்கு 12 லட்சம் என்று தெரியும். இவர்கள் யார் யார் எவ்வளவு செலவு பண்ணியிருக்கிறார்கள் என்று எனக்கு வெளிப்படையாக தெரியாது . குணசேகரன் என்னிடம் டிரைவராக இருந்தார். அதனால் எங்களுக்குள் பிரச்சினையை பேசி முடித்திருக்கிறோம் என்று சொல்லி என்னிடம் சாட்சி கையெழுத்து போடச்சொன்னார். இந்த பேச்சுவார்த்தை கௌன்சிலர் பத்ம குமரேசன் அலுவலகத்தில் வைத்து தான் பேசப்பட்டது என்றால் ஆமாம் . எனக்கு பத்ம குமரேசனை தெரியும். குணசேகரன் என்னிடம் ஆக்டிங் டிரைவராக தான் வேலை பார்த்தார் . நானும் பத்ம குமரேசனும் கட்ட பஞ்சாயத்து செய்து இவ்வாறு ஆவணம் தயாரித்திருக்கிறோம் என்றால் சரியல்ல . வாதியும் பிரதிவாதியும் இந்த ஆவணத்தை பேசி தட்டச்சு செய்து கொண்டு வந்தார்கள். எங்கள் முன்னிலையில் தான் இருவரும் கையெழுத்து செய்தார்கள். எங்கு வைத்து தட்டச்சு செய்தார்கள் என்று தெரியாது . தட்டச்சு செய்து குணசேகரனும் , குருமூர்த்தியும் தான் கொண்டுவந்தார்கள். அந்தயிடத்தில் நான், பத்ம குமரேசன் தான் இருந்தோம். குருமூர்த்தியும் குணசேகரனும் உள்ளே இருந்தார்கள் . அவர்களுடைய உறவினர்கள் வெளியே இருந்தார்கள். அவ்வாறு ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றாலும் நாங்களாக கட்ட பஞ்சாயத்து செய்து தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தில் வேறு

கையெழுத்து போட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் மருதையன் போட்டிருக்கிறார். குருமூர்த்தி மற்றும் குணசேகரன் காலங்காலமாக எப்படி கையெழுத்து போடுவார்கள் என்று எனக்கு தெரியாது. சொத்து விபரத்தில் கண்டுள்ள சொத்து எப்படி கட்டப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதி குணசேகரன் சொல்லி எனக்கு தெரியும். இந்த பத்திரமே பிரதிவாதியிடமிருந்து பணம் பிடுங்க வேண்டும் என்பதற்காக நான், வாதி, பத்ம குமரேசன் ஆகியோர் சேர்ந்து தயாரித்த ஆவணம் என்றால் சரியல்ல. இந்த பத்திரம் எங்கே யாரால் எந்த தேதியில் வாங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.